# சங்க இலக்கியத்தில் கொடை மடம்

**முனைவர் க.காயத்ரி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர்
சிதம்பரம்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தமிழகத்தில் எத்தனையோ கொடை வள்ளல்கள் வாழ்ந்திருந்த போதும் பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்னும் பெயருடைய ஏழு வள்ளல்களையும் இலக்கியம் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளது. காட்டில் மயில் அகவுவதும் காட்டில் முல்லைக் கொடி படர்ந்து கிடப்பதும், இரவலர்கள் வறுமையில் யாசிப்பதும் இயல்பான நிகழ்வுகளேயாகும். மிக உயர்ந்த நீலக் கலிங்கத்தையும், நீண்டகாலம் உயிர்வாழ வைக்கும் நெல்லிக் கனியையும், தனக்கென்று வைத்துக்கொள்ளாமல் இறைவனுக்கும் தமிழ் மூதாட்டிக்கும் கொடுத்த வள்ளல்களைக் காண்கிறோம். அவையெல்லாம் இயல்பான நிகழ்வுகள் என எண்ணாமல் அஃறிணைப் பொருள்களிடத்தும் இரக்கம்கொண்டு அருளுதல், அவ் அருள் உணர்ச்சி தோன்ற செய்தச் செயல்தான் 'கொடை மடம்' எனப்பட்டது. அறிவு மடம் பட்ட நிலையில், அறிவு வழி செல்லாமல் உயிர்களிடத்துக் கொண்ட கருணையால், அருளால், உணர்ச்சியால் தங்களிடத்து உள்ள உயர்ந்தப் பொருள்களைக் கொடையாகக் கொடைமடத்தை அறியலாம். சிறுபாணாற்றுப்படை, புறநானூறு கூறும் ஏழு வள்ளல்களின் சிறப்பினைக் இக்கட்டுரையில் காணலாம்.

### பேகன்

மலைப்பக்கத்துக் காட்டில் திரிந்த மயில் அகவியதனைக் கேட்டு, அது குளிரால் நடுங்கியதால் அகவியது என்றுக் கருதி இரக்க உணர்வுமேலிட அறிவு மடம்பட்ட நிலையில் தனது போர்வையைக் கொடுத்தான். அதனை,

> **“வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்**
> **கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
> **அருந்திறல் அணங்கின் ஆவியர்பெருமகன்,**
> **பெருங்கல் நாடன் பேகனும்” (சிறுபாணாறு: 84-88)**

என்னும் செய்யுளடிகள் கூறுகின்றன.

### பாரி

பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன். முந்நூறு ஊர்களைக்கொண்ட பறம்பு மலையை பரிசிலர்க்கு ஈந்த வள்ளல். அதனை,

> **“முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு**
> **முந்நூறு வாரும் பரிசிலர் பெற்றனர்” (புறம். 100)**

என்கிறது பாடல்.

இப்பாடலடிகள் பாரியின் கொடைத்தன்மையைப் பேசுகின்றன. அவன் கொடை மடம்பட்ட நிலையில் வழியில் படர்ந்து கிடந்த முல்லைக் கொடி படரத் தன் தேரை ஈந்ததை,

**“. . . . . . . சுரும்பு உண**
**நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்**
**சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய,**
**பிறங்கு வெள் அருவி வீழும் சாரல்**
**பறம்பின் கோமான் பாரி”** **(சிறுபாணாறு: 86-90)**

என்னும் பாடடிலகளால் அறியலாம்.

அச்செய்தியை,

**“தேருடன் முல்லைக்கு ஈத்த செல்லா**
**நல்லிசைப் படுமணி யானைப் பறம்பிற் கோமான்”** **(புறம். 201 : 2-4)**

என்கிறது இலக்கியம்.

**காரி**

காரி வள்ளல் மலையமான் திருமுடிக்காரி என்றும் மலையமான் என்றும், காரி என்றும் அழைக்கப்பட்டார். உலகத்துச் சான்றோர் வியக்கும்வண்ணம் கொடை கொடுத்தவன் இரவலரிடத்து இனிமையாகப் பேசும் தன்மையன்.

**“. . . . . . . . . கறங்குமணி**
**வால் உளைப் புரவியொடு வையகம், மருள,**
**ஈர நல்மொழி இரவலர்க்கு ஈந்த,**
**அழல் தொடித் தடக்கை, காரி . . . . . .”** **(சிறுபாணாறு: 91 - 95)**

காரி வரையாது வழங்கிய தேர்கள் மழைத் துளியினும் பல என்றும் அவன் முள்ளூர் மன்னன் என்றும், பரிசலர் பொன் அணிகலன் அணிந்த நெடுந்தேரினை என்ன செய்வார்கள், அவர்களது வறுமையைப் போக்கிடுமா என ஆராயாமல் ஈர நெஞ்சோடும், இரக்க உணர்வோடும் பொன் துணிகலன் அணிந்த நெடுந்தேரினைக் கொடையாக வழங்கினான். அவ்வாறு வழங்கிய தேர்கள் பயன்பொருந்திய முள்ளூர் மலை உச்சியின் கண் பெய்த மழைத்துளியிலும் பலவாகும் என்பதனை,

**“தொலையா நல்இசை விங்கு மலையன்**
**மகிழாது ஈத்த இழை அணிநெடுந்தேர்**
**பயன்கெழு முள்ளூர் மீமிசைப்**
**பட்ட மாரி உறையினும் பலவே”** **(புறம். 123 : 3-6)**

என்ற பாடலடிகள் குறிக்கின்றன.

**ஆய்**

ஒளி மிக்க நீலமணியினையும் நாகம் கொடுத்த கலிங்கத்தையும் விருப்பத்தோடு ஆலின் கீழ் இருந்த இறைவனுக்குக் கொடுத்தான். உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் இறைவனுக்குக் நீலமணியையும் நாகம் கொடுத்தக் கலிங்கத்தையும் கொடுக்கலாமா என எண்ணாமல் அறிவு மடம்பட்ட நிலையில் கொடுத்தான். அவனது கொடை மடத்தை,

**“. . . . . . . . . . . நிழல் திகழ்,**
**நீல, நாகம் நல்கிய, கலிங்கம்**
**ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த,**
**சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்,**
**ஆர்வ நன்மொழி ஆய்”** **(சிறுபாணாறு, 45-99)**

என்னும் பாடலடிகள் சொல்லும்.

**அதிகன்**

அதியர் குடியில் பிறந்தவன். அதிகன், அதியன், அதிகமான், அதியமான், நெடுமான்

அஞ்சி, அஞ்சி என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டான். அமிழ்தின் தன்மையை உடைய நெல்லியம் தீம்கனியை நுகர்ந்தார் நரை, திரை, மூப்பு, சாக்காடு ஆகிய தன்மைகளிலிருந்து நீங்கிடுவர் என்னும் செய்தியை அதிகன் சான்றோர் வாயிலாக அறிந்தான். அக்கனியைத் தான் உண்ணக் கருதாமல், தன்னிடமே வைத்திருந்தான். பின்னர் ஒருநாள் தன்னைக் காண வந்த ஔவைக்கு ஈந்தான். அதன் வரலாற்றையும் தன்மையும் கூறாது ஔவையின் புலமை நலம் சிறந்து நீண்டகாலம் வாழக் கொடுத்தான் அக்கொடையை,

**"‘. . . . . . . . . . . . மால்வரைக்**
**கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி**
**அமிழ்து விளை தீம்கனி ஔவைக்கு ஈந்த**
**உரவுச் சினம் கனலும் ஒளிறிகழ் நெடுவேல்**
**அரவக் கடல் தானை, அதிகன் . . . . . . ."** **(சிறுபாணாறு. 99 - 102)**

என்னும் செய்யுட் பகுதியால் அறியலாம்.

**நள்ளி**

நள்ளி மலைநாட்டைச் சேர்ந்தவன். தன்னிடம் வந்தவர்க்குப் பின்னர் வறுமையால் வாடாதவாறும் வேறொருவர் பாற்சென்று இரவாது இருக்குமாறு நிரம்பக் கொடுத்த கொடையாளன். இரவலர்பால் காட்டும் பரிவுணர்ச்சியே அவனது கொடை மடத்துக்கு காரணமாகும். அதனை,

**"‘. . . . . . . . . . . . . . . . கரவாது**
**நட்டோர் உவப்ப, நடைப்பரி காரம்**
**முட்டாது கொடுத்த, முனைவிளங்கு தடக்கை,**
**துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு**
**நளிமலைநாடன், நள்ளி"** **(சிறுபாணாறு, 103-107)**

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

**ஓரி**

சிறிய மலைகளை உடைய நல்ல நாட்டிற்குத் தலைவன் ஓரி என்பதனை அறியலாம். அவனது வீரத்திற்குச் சான்றாக யானையை வீழ்த்திய அம்பு பின்பு கலைமானை வீழத்தியது. பின்னர் பன்றியைக் கொன்றது. பின்னர் உடும்பில் சென்று தைத்தது என அம்பெய்தும் திறத்தில் சிறந்தவன் என்பதனால் அறியலாம். வலிமை பொருந்திய அம்பின் திறத்தால் வல்வில் ஓரி என்று சிறப்பிக்கப் பெற்றான். அவன் தனது நாட்டைப் பரிசிலர்க்கு ஈந்தான். அவன் காரியோடு போரிட்டான் என்பதனை,

**"‘குறும்பொறை, நல்நாடு கோடியர்க்கு ஈந்து,**
**காரிக்குதிரைக் காரியொடு மலைந்த**
**ஓரிக் குதிரை, ஓரியும்"** **(சிறுபாணாறு. 107-111)**

என்னும் பாடலடிகள் சொல்கின்றன.

மலைப்பக்கத்தில் காட்டில் திரிந்த மயில் குளிரால் நடுங்கி அகவியதாகக் கருதி, இரக்க உணர்ச்சி மேலிட தனது போர்வையைக் கொடுத்தான் பேகன். பாரி அரும்புகள் உண்ணும்படி தேன் கொடுக்கும் அரபுன்னை மரங்கள் நிறைந்த நெடிய வழியில் தனது தேரைத் தடுத்த முல்லைக்கொடி அதனை விரும்பியதாகக் கருதி தனது பெரிய தேரை அளித்தான். இரவர்கள் பால் இரக்க உணர்ச்சி மேலிட இனிமையாகப் பேசும் காரி. பெறுதற்கரிய சிறந்த மணியையும் ஆடையும் பெற்றிருந்த ஆடையையும் இறைவன்பால் பரிவுணர்வு மேலிடக் கொடுத்து மகிழ்ந்தவன் ஆய். அரிய சுவை மிக்க தீங்கனியைத் தனக்கொன உண்ணாமல் தமிழ் மூதாட்டி நெடும் காலம் வாழச் கொடுத்தான் அதியன். வில்லாற்றலில் சிறந்த ஓரி காரியொடு பொருது கொல்லிமலையைக் கைப்பற்றினான். சேர நாட்டைத் தானே வைத்துக்கொள்ளாமல் பரிவுணர்ச்சி மேலிட சேரர்க்குத் தந்தான் ஓரி. ஏழு வள்ளல்களும் அறிவு மடமையுற்ற நிலையில் தமக்குக் கிடைத்தற்கரிய பொருள்களைப் பிற உயிர்கட்கும் இறைவர்க்கும் அளித்ததைச் சங்கப் பாடல்கள் பதிவாக்கியுள்ளன.